பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

20 02 2025 **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தில்லியில் இன்று பொறுப்பேற்றுள்ள புதிய அரசு வளர்ச்சிக்காக முழு ஈடுபாட்டுடன் செயல்படும் என்று தாம் நம்புவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. கடந்த பத்தாண்டுகளில் வடகிழக்கு மாநிலங்களில் தீவிரவாத குழுக்களின் கட்டுப்பாட்டில் இருந்த 10 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஆயுதங்களை ஒப்படைத்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. ஜி-20 வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் இன்று ஜோகன்னஸ்பர்க் சென்றடைந்தார்.

4. மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் டாக்டர் வி அனந்த நாகேஸ்வரனின் பதவிக்காலம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

5. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா வெற்றிபெற 229 ரன் இலக்கினை பங்களாதேஷ் நிர்ணயித்துள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<<>>>>>>

தில்லியின் புதிய முதலமைச்சராக இன்று பதவியேற்ற திருமதி ரேகா குப்தாவுக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், கட்சியின் அடிப்படை உறுப்பினராக இருந்தது முதல், படிப்படியாக தனது செயல்திறனை வெளிப்படுத்தி, அரசியலில் உயர்நிலைக்கு வந்துள்ளார் என்று கூறியுள்ளார்.

மாநகராட்சி நிர்வாக பொறுப்பையும் சிறப்பாக கவனித்த அவர், தற்போது தில்லி சட்டப்பேரவை தேர்தலில் வெற்றிபெற்று, முதலமைச்சராகவும் உயர்ந்துள்ளார் என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

தில்லியின் வளர்ச்சிக்காக முழு ஈடுபாட்டோடு திருமதி ரேகா குப்தா செயல்படுவார் என்று தமக்கு முழு நம்பிக்கை உள்ளதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தில்லி அமைச்சர்களாக இன்று பொறுப்பேற்றுள்ள அனைவருக்கும் தமது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாக பிரதமர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

கடந்த பத்தாண்டுகளில் வடகிழக்கு மாநிலங்களில் தீவிரவாத குழுக்களின் கட்டுப்பாட்டில் இருந்த 10 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஆயுதங்களை ஒப்படைத்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று, அஸ்ஸாம் ரைஃபிள்ஸ் ஏற்பாடு செய்திருந்த ஒற்றுமை தின விழாவில் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி வடகிழக்கு மாநிலங்களுக்கு புதிய பரிமாணத்தை உருவாக்கித் தந்துள்ளதாக தெரிவித்தார்.

வடகிழக்கு மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சி, கலாச்சார மேம்பாடு, விளையாட்டு, கல்வி, வேளாண்மை, சிறு தொழில்கள் என பல்வேறு துறைகளிலும் இளைஞர்களுக்கு அபரிமிதமான வாய்ப்புகளை மத்திய அரசு ஏற்படுத்தித் தந்துள்ளதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<>>>>>>

ஜி-20 வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று தென்னாப்பிரிக்கா தலைநகர் ஜோகன்னஸ்பர்க் சென்றடைந்தார்.

ஜி-20 உறுப்பு நாடுகளுடன் இந்தியாவின் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இம்மாநாட்டின்போது திரு ஜெய்சங்கர் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

உலகின் தெற்கு நாடுகளின் கோரிக்கைகளை இம்மாநாட்டில் முன்வைக்க அவர் திட்டமிட்டுள்ளார்.

இம்மாநாட்டையொட்டி, பிரேசில் அமைச்சர் திரு **Mauro Vieira ’** சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் திரு **‘Vivian Balakrishnan** ஆகியோரையும் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து டாக்டர் ஜெய்சங்கர் பேச்சு நடத்தவுள்ளார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் டாக்டர் வி அனந்த நாகேஸ்வரனின் பதவிக்காலம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, மத்திய நிதியமைச்சகம் பிறப்பித்துள்ள உத்தரவில், 2027 மார்ச் மாதம் வரை அவர் இந்த பதவியில் நீடிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

விமானிகளுக்கு மின்னணு பைலட் உரிமம் நடைமுறையை மத்திய சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு இன்று தொடங்கிவைத்தார்.

பைலட்டுகள் தங்களது உரிமங்களை எளிய முறையில் புதுப்பிப்பதற்கு மின்னணு முறை உதவிகரமாக இருக்கும்.

கைபேசி சேவையின் மூலம், உரிமங்களை புதுப்பித்துக் கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு ராம்மோகன் நாயுடு, பைலட்டுகளுக்கு மின்னணு உரிமம் வழங்கும் இரண்டாவது நாடாக இந்தியா உள்ளது என்று தெரிவித்தார்.

மின்னணு உரிமங்கள் நிர்வாகத்திற்கென தனியாக மின்னணு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதால், சரிபார்ப்பு பணிகளையும் உடனுக்குடன் மேற்கொள்ள இயலும் என்றும் அவர் கூறினார்.

விமான நிலையங்கள், விமான இயக்கம் மற்றும் விதிமுறைகள் ஆகியவற்றுக்கு உறுதுணையாக இந்த கட்டமைப்பு செயல்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகில் மிக வேகமான விமான சேவை கட்டமைப்பை இந்தியா உருவாக்கி வருவதாகவும் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மிசோரம் மாநில நிறுவன நாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளபதிவில், செயல்திறன் மிக்க மாநிலமாக திகழும் மிசோரம், வளமான நிலப்பரப்பை கொண்டுள்ளது என்றும், பாரம்பரிய கலாச்சாரங்கள் மற்றும் மக்களின் எளிமையான பழக்க வழக்கங்கள் போற்றுதலுக்குரியது என்றும் கூறியுள்ளார்.

பல்வேறு சமூக மக்கள் நல்லிணக்கத்தோடு வாழும் நடைமுறையை இம்மாநில மக்கள் பின்பற்றி வருவது பெருமைக்குரியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மிசோரம் மாநிலம் அமைதி மற்றும் வளர்ச்சிப்பாதையில் மென்மேலும் உயர வாழ்த்துவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தமது வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

பூட்டான் பிரதமர் திரு **Tshering Tobgay** மூன்று நாள் அரசு முறைப்பயணமாக இன்று புதுதில்லி வந்துள்ளார்.

இப்பயணத்தின்போது பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்த திட்டமிட்டுள்ளார்.

நாளை நடைபெறும் **SOUL** தலைமைத்துவ கருத்தரங்கில் அவர் உரையாற்றவுள்ளார்.

பூட்டான் பிரதமரின் இந்திய வருகை இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

<<<<<<>>>>>>

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் பத்தாண்டுகால சிறப்பான நிர்வாகத்தின் காரணமாக இந்தியா உலகிலேயே விரைவாக வளர்ந்துவரும் பொருளாதார நாடாக உருவெடுத்துள்ளது என்று மத்திய சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை இணையமைச்சர் ஷோபா கரந்தலாஜே தெரிவித்துள்ளார்.

மிசோரம் தலைநகர் **Aizawl**–ல் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியதால், மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களுக்கான அதிகாரம் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கு மத்திய அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாகவும், இதனால் பொருளாதார வளர்ச்சி விரைவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக கூறிய அவர், இதன் காரணமாக இந்த மாநிலங்களில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை மேம்படுத்தப்பட்டு வேளாண் உற்பத்தியும் அதிகரித்திருப்பதாக தெரிவித்தார்.

வடகிழக்கு மாநிலங்களின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக அதிக அளவு நிதியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் ஷோபா கரந்தலாஜே கூறினார்.

<<<<<<>>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் ஆன்மிக திருவிழாவான மகா கும்பமேளாவையொட்டி, தூய்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தூய்மை கங்கா இயக்கத்தின் சார்பில், கங்கை நதியை தூய்மையாக பராமரிப்பதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த இயக்கம் சார்பில், பத்து கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு, கங்கை ஆற்றை தூய்மைப்படுத்தும் பணி நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கும்பமேளாவிற்கு வரும் பக்தர்கள் காணும் வகையில் நவீன தொழில்நுட்பத்தில் மின்னணு கட்டமைப்புகள் நிறுவப்பட்டு, விழிப்புணர்வு வாசகங்கள், குறும்படங்கள் அங்கு திரையிடப்பட்டு வருகின்றன.

பக்தர்களின் வசதிக்காக நவீன கழிப்பறைகள், நவாமி கங்கா இயக்கத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ளது.

கங்கை, யமுனை ஆறுகளில் நீர்வரத்து, மாசுபாட்டின் அளவு ஆகியவற்றை பக்தர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் மின்னணு பதாகைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

**<<<<<<>>>>>>**

காஸா போரின்போது உயிரிழந்த இஸ்ரேல் நாட்டை சேர்ந்த நான்கு பேரின் உடல்கள் இன்று ஒப்படைக்கப்பட்டன.

இதுகுறித்து தெரிவித்த இஸ்ரேல் ராணுவ அதிகாரிகள், உடல்களை முழுமையாக அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறினர்.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில், பங்களாதேஷுக்கு எதிரான ஆட்டத்தில் 229 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை 9 புள்ளி 2 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 69 ரன் எடுத்துள்ளது.

துபாயில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த பங்களாதேஷ் 49 புள்ளி நான்கு ஓவரில் 228 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

**Towhid Hridoy** சதம் அடித்தார்.

முஹமது சமி அபாரமாக பந்துவீசி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

-----------

ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி பட்டம் வென்றார்.

தோஹாவில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில் அவர் ஈரானின் **Amir Sarkhoshi** –ஐ வென்றார்.

-----------

தேசிய பாரா தடகள சாம்பியன் போட்டி சென்னையில் இன்று நிறைவடைகிறது. கடைசி நாளான இன்று ஆடவர் வட்டு எறிதல் பிரிவில் தமிழகத்தின் அலெக்சாண்டர் மணியும், மகளிர் ஈட்டி எறிதல் பிரிவில் நேத்ராவதி ஈஸ்வரனும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

---------------

சீனாவில் நடைபெற்றுவரும் ஆசிய கோப்பை டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஹர்மித் தேசாய், ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற்றார்.

**<<<<<<END>>>>>>**